செ.வெ.எண் : 70 நாள் : 29-11-2017

**பத்திரிக்கை செய்தி (23.11.2017)**

**தகுதி வாய்ந்த இந்து ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்த விண்ணப்பதாரர்களின் கனிவான கவனத்திற்கு**

2017-18-ம் நிதியாண்டில் தாட்கோ மூலம் இந்து ஆதிதிராவிடர்களுக்காக நிலம் வாங்குதல், நிலம் மேம்படுத்துதல், தொழில்முனைவோர், இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்பு மற்றும் கிளினிக் அமைத்தல், சுயஉதவி குழுக்களுக்கான சுழல்நிதி, பொருளாதார கடனுதவி, விவசாயத்திற்கான விரைந்து மின் இணைப்பு பெறுதல், மேலாண்மை இயக்குநரின் விருப்புரிமை நிதி திட்டம், தாட்கோ தலைவரின் விருப்புரிமைநிதி திட்டம், இந்திய குடிமை பணிமுதன்மை தேர்வு (IAS), தமிழ்நாடு தேர்வாணையம் குருப் -1(GROUP-1), முதன்மை தேர்வு எழுதுவோர்க்கும், சட்டபட்டதாரி மற்றும் பட்டயகணக்கர்/செலவு கணக்கர் /நிறுவன செயலர் தொழில் தொடங்க நிதியுதவி மற்றும் மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமைநிதி திட்டம் ஆகியன செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்கண்ட திட்டங்களில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் விருப்புரிமை நிதி திட்டத்தின்கீழ் பயன்பெற விரும்புவோர் மட்டும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் திங்கள் குறைதீர்க்கும் மனுநீதி நாளில் மனு வழங்க வேண்டும். இதர திட்டங்களுக்கு http://application.tahdco.com என்ற இணையதள முகவரி மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

விண்ணப்பிக்கும் நபர்கள் இந்து ஆதிதிராவிடராகவும், 18 வயது நிரம்பிய 65 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்பு மற்றும் கிளினிக் அமைக்கும் திட்டத்தின்கீழ் விண்ணப்பிப்பவர்களுக்கு 18 வயது நிரம்பியவர்களாகவும், 45 வயதிற்குட்பட்டவராகவும், சட்ட பட்டதாரி எனில் 21 முதல் 45 வயதிற்குட்பட்டவராகவும், பட்டய கணக்கர் இனம் எனில் 25 முதல் 45 வயதிற்குட்பட்டாவராகவும் இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரரின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 லட்சத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். சுயஉதவி குழுக்கள் எனில் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2.00 லட்சம் வரையிலும், (IAS), மற்றும் (GROUP-1), தேர்வுக்கு விண்ணப்பவர் எனில் ரூ.3.00 லட்சம் வரை இருக்கலாம்.

மேலும் விபரங்களுக்கு அலுவலக நாட்களில், அலுவலக நேரத்தில் மாவட்ட மேலாளர், தாட்கோ அலுவலகம், போலீஸ் ரிசர்வ்லைன் ரோடு, பாளையங்கோட்டை –627 002 என்ற முகவரியில் நேரில் அணுகி பயனடையுமாறு தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருநெல்வேலி

23/11/17

வெளியீடு :
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி